IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.44/2025

Deposition of Witness for P.W.7

| | |
|---|---|
| NAME | - தேசிகாமணி |
| FATHER NAME | - சண்முகம் |
| VILLAGE | - காங்கேயநல்லூர் |
| TALUK | - காட்பாடி |
| OCCUPATION | - பால் வியாபாரம் |
| AGE | - 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.01.2026.

1 முதல் 3, 5, 6, 8 முதல் 9 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார்.

7ம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் காங்கேயநல்லூரில் வசித்து வருகிறேன். பால் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்தை எப்போது எங்கு எதற்காக செய்து கொடுத்தேன் என நினைவில்லை. 8ம் எதிரி ரஞ்சித் குமார் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது. பிரசாந்தை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரியும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.)**

குறுக்கு விசாரணை-

21.07.2020 தேதி பகல் 15.00 மணிக்கு விருதம்பட்டு பழைய பாலாறு பாலம் அருகே 8ம் எதிரி ரஞ்சித் குமாரை என் முன்னிலையிலும் பிரசாந்த் முன்னிலையிலும் காரணம் கூறி கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும், அதில் நானும் பிரசாந்தும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 22.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.23 10:56:19 +0600

Additional District Judge(FTC),
Vellore